விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 232 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 23 வெள்ளிக்கிழமை (08.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஓடும் ரயிலில் ஏற முயற்சி ஒரு காலை இழந்த யுவதி

### காங்கேசன்துறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் யுவதி ஒருவர் ஓடும் ரயிலில் ஏற முயற்சி செய்தபோது தவறுதலாக கால் இடறி விழுந்தவேளை புகையிரதத்துக்கும் புகையிரத மேடைக்கும் இடையில் கால் அகப்பட்டதில் அவரது ஒரு கால் பறிபோயுள்ளது.

நேற்று வியாழக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## விபரீத முடிவெடுத்த குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் விபரீத முடிவெடுத்த குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை

02ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி இராமநாதபுரம் வயலூர் முருகன் ஆலயத்தில்

### 6 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய்க்கு மாம்பழம் ஏலம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராமநாதபுரம் வயலூர் முருகன் ஆலயத்தில் 6 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய்க்கு மாம்

15ஆம் பக்கம் பார்க்க

## அராலியில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி செல்லமணி கடைப் பகுதியில் இடம்பெற்றவிபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அராலி மத்தி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா ஜெயரட்ணம் (வயது-74) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி நபர் கடந்த முத

02ஆம் பக்கம் பார்க்க

### தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை

# என்னால் உத்தரவாதம் வழங்க முடியாது

### சபையில் நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார

(கொழும்பு)



தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் என்னால் உத்தரவாதம் தர முடியாது என நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில்

## யானை தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

(வவுனியா)

வவுனியா பெரியதம்பனைப் பகுதியில் யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கிடாப்பிடிச்ச

15ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் காற்றாலைத் திட்டத்தை இடைநிறுத்துவதற்குத் தீர்மானம்

(கொழும்பு)

மன்னார் காற்றாலை மின் திட்டப்பணிகளை இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் காற்றாலை திட்டம் மற்றும் இல்மனைட் கனிய வளம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று வியாழக்கிழமை (07) விசேட கலந்துரையாடல் ஒன்று மின்சாரத்துறை அமைச்சர் அருண கருணாதிலக தலைமையில் இடம்பெற்றது.

இந்தக்கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு உட்பட பல்வேறு

02ஆம் பக்கம் பார்க்க

## அக்கரை கடற்பரப்பில் இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அக்கரை கடற்பரப்பில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மாலை கரையொதுங்கியுள்ளது.

உயிரிழந்தவர் கரணவாய் பகுதியை சேர்ந்த இளைஞன் என அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## கிளிநொச்சி புதுமுறிப்பில் துப்பாக்கி ரவைகள் மீட்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்புப் பகுதியில் நேற்று அதிகளவான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம் அருகாமையில் நேற்றைய தினம் காலை

15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## நாடு முழுவதும் சோதனை

### 838 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் நடத்தப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பாக 838 பேர் கைது செய்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வ-து)

### பதவி வெற்றிட விண்ணப்பம் கோரல் (வெளிவாரி)

| | | |
|---|---|---|
| பதவி | : | கணக்காளர் (நிரந்தரம்) 01 |
| சம்பள குறியீட்டு இலக்கம் | : | 104/09 |
| சம்பள அளவு திட்டம் | : | 35200-450×10-460×10-44300 |
| சுற்று நிருப இலக்கம் | : | 02/2025 |

**தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 10வது சம்பளத்திட்டப்பதவியில் கணக்காளர்/உள்ளகக் கணக்காய்வாளர்/கணக்குப்பதிவாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்
கூட்டுறவு ஊழியர் 11வது சம்பளத்திட்டப் பதவியில் உள்ளகக் கணக்காய்வாளா "அல்லதுகணக்குப்பதிவாளர் கணக்கு அல்லதுகணக்காய்வு எழுதுனர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ) இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்கு சமனான தகைமை/மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்/
க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு தொடர்பாக பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்.

### பதவி வெற்றிட விண்ணப்பம் கோரல் (வெளிவாரி)

| | |
|---|---|
| 01) பதவி | : களஞ்சியப்பொறுப்பாளர்(நிரந்தரம்) ஆண்- ஒருவர் |
| குறியீட்டு இலக்கம் | : 202/12 |
| சம்பள அளவுத்திட்டம் | : 33820-370×10-385×10-41370 |

**தகைமைகள்**

1. கூட்டுறவு ஊழியர் 13வது சம்பளத்திட்டப்பதவியில் களஞ்சியப்பொறுப்பாளர்/கொள்வனவு உத்தியோகத்தர்/கிளை மேற்பார்வையாளர்/கிளை முகாமையாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத்திட்டப்பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

2. கூட்டுறவுஊழியர் உயர்தராதரப்பத்திரப்பரீட்சையில்சித்தி/க.பொ.த உயர் தரப்பத்திரப்பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது ஒரு ஆண்டுகால அனுபவம்.

அல்லது

3. கூட்டுறவு உழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 6 திறமைச்சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்த 04 ஆண்டு கால அனுபவம்.

| | |
|---|---|
| 02) பதவி | : களஞ்சியமுகாமையாளர்(நிரந்தரம்) ஆண்- ஒருவர் (வடிகலன் இயக்குனர்) |
| குறியீட்டு இலக்கம் | : 208/14 |
| சம்பள அளவுத்திட்டம் | : 32900-355×10-365×10-40100 |

**தகைமைகள்**

1. கூட்டுறவு ஊழியர் 15வது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம் கூட்டுறவு ஊழியர் 16வது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

2. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/க.பொ.த. சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி,கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி

| | |
|---|---|
| 03) பதவி | : காவளாளி (நிரந்தரம்) ஆண்- ஒருவர் |
| குறியீட்டு இலக்கம் | : 315/16 |
| சம்பள அளவுத்திட்டம் | : 31975-335×10-350×10-38825 |

**தகைமைகள்**

1. கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் ஆகக்குறைந்தது ஒரு ஆண்டு கால அனுபவம்

அல்லது

2. 05ஆம் தர கல்விச்சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

### பொதுவான நிபந்தனைகள்

- வயதெல்லை:18-45 வயதிற்கு உட்பட்டவர்கள்.
- தற்போது கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரிபவராயின் வயதெல்லை கருத்திற்கொள்ளப்படமாட்டாது.
- கொத்தணி எல்லைப்பரப்பிற்குள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- நிறுவனத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.
- ஏனைய கூட்டுறவு நிறுவனங்களின் தற்போது பணியாற்றுபவர்களாயின் அச் சங்கத்தின் ஊடாக விண்ணப்பம் செய்யப்பட வேண்டும்.
- பதவிக்கு தெரிவு செய்யப்படின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங் களுக்கமைவாக நிர்வாகசபையால் விதிக்கப்படும் ரொக்கப்பிணையும், ஆதாரப் பிணையும் செலுத்துதல் வேண்டும்.
- தேவையான அனைத்து ஆவணங்களையும் பிரதிசெய்து இவ்விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பங்கள் யாவும் பதவிக்கான பெயர் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி வரணி. எனும் முகவரிக்கு குறிப்பிட்ட திகதிக்கு பிந்தாது அனுப்புதல் வேண்டும்.
- காலத்திற்கு காலம் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களுக்கமைவாக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- விண்ணப் முடிவுத்திகதி 27.08.2025
- மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள -021 2050854

**க.செல்வேஸ்வரன்**
தலைவர்

(C-3598) 08.08.2025

# மறைக்கப்பட்ட குற்றங்கள் முழுமையாக விசாரிக்கப்படும்

## சபையில் ஜனாதிபதி அநுர



(கொழும்பு)

இந்த நாட்டில் மறைக்கப்பட்ட குற்றங்கள் அனைத்தும் முழுமையாக விசாரிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் 100 முதல் 150 பில்லியன் ரூபாய் வரை வரி செலுத்தாமல் உள்ள 200 பெரிய வரி ஏய்ப்பு செய்பவர்களின் பட்டியல் என்னிடம் உள்ளது.

கவலைப்படாதீர்கள், உங்கள் முகங்கள் எதுவும் இந் தப் பட்டியலில் இல்லை என்று அவர் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கூறினார்.

மேலும் அரச வங்கிகளில் கடன் வாங்கிய 50 முக்கிய கடன்களை திருப்பிச் செலுத்தாதவர்கள் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கும் நிவர்த்தி செய்வதற்கும் வங்கிகளுக்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் உறுதியளித்தார்.

இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் வெளிநாட்டுக் கையிருப்பு 7 பில்லியன் டொலர்களைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

## விபரீத ...

இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த வரதராஜன் கலா (வயது-44) என்பவரே உயிரிழந்தவராவார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் மேற்கொண்டார்.

அலரி விதை உட்கொண்டதால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## அராலியில்...

லாந்திகதி வெள்ளிக்கிழமை மிளகாய் தூள் அரைத்துக் கொண்டு துவிச்சக்கர வண்டியில் வட்டுக்கோட்டையில் இருந்து அராலி நோக்கி சென்று கொண்டிருந்தபோது பின் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதித் தள்ளியது.

இதில் படுகாயமடைந்த நிலையில் கொட்டக்காடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (06) இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## மன்னார் ...

தரப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் மன்னார் காற்றாலை மின்திட்டத்தால் மன்னார் மாவட்ட மனித மற்றும் இயற்கை வாழ்விடங்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

திட்டத்தின் ஆரம்ப பணிகளால் ஏற் பட்டுள்ள பாதிப்புக்களை மன்னார் மாவட்ட சிவில் பிரஜைகள் இதன் போது எடுத்துரைத்துள்ளனர்.

காற்றாலை மின்திட்டம் குறித்து சகல தரப்பினருடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கும் அதுவரையில் இத்திட்டப் பணிகளை இடைநிறுத்துவதற்கும் மின்சாரத் துறை அமைச்சர் தலைமையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்விடயம் குறித்து இரண்டு வாரங்களுக்கு பின்னர் ஜனாதிபதியுடன் விசேட கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கும் இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மின்திட்டப் பணிகளுக்கான பொருத்தல் உபகரணங்களைத் தீவுக்குள் கொண்டு செல்லாமல் அவற்றை பிறிதொரு இடத்தில் பாதுகாப்பாக வைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு இதன் போது அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ம-7)


## வேலையாட்கள் தேவை

- பொறியியலாளர் - Bsc Civil
- தொழில்நுட்ப உத்தியோகத்தர் - HND OR NCT Civil/NVQ Level -05
- வேலை மேற்பார்வையாளர்

சுயவிபரக் கோவையை Email மூலம் அனுப்பிவைக்கவும்
kpkkilinochchi@gmail.com

- பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் - சட்டரிங் மற்றும் கம்பி வேலை, மேசன், பெயின்டர், கூலி வேலையாட்கள்
- உப ஒப்பந்த வேலைகளும் வழங்கப்படும் (Sub Contractor) உப ஒப்பந்ததாரர் தொடர்பு கொள்ளவும்.

தகைமை அடிப்படையில் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 698 3583, 077 248 4406


(C-3601)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும்!

❖ மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படாது!

❖ குரூர சிந்தனையுடன் எதிர்க்கட்சிகள் செயற்பட வேண்டாம்!



# சபையில் உறுதிபடத் தெரிவித்தார் அநுர

(கொழும்பு)

**பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் அத்துடன் பொருளாதார நெருக்கடி நாட்டில் மீண்டும் ஏற்படாது என ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க உறுதிபடத் தெரிவித்தார்.**

பாராளுமன்ற அமர்வில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

அமெரிக்க பரஸ்பர தீர்வை வரி விவகாரத்தில் எவ்வித இறுதி ஒப்பந்தங்களும் இது வரையில் கைச்சாத்திடப்படவில்லை எனவும் இது தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம்.

பொருளாதாரம் பாதிக்கப்படும் மீண்டும் நெருக்கடி ஏற்படும் என்ற கனவை மறந்து விடுங்கள்.

இடைக்கால ஜனாதிபதி என்பதொன்று ஏற்படாது. மாற்று வழியில் அரசியல் செய் யுங்கள் என்பதை எதிர்க்கட்சிகளுக்கு குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

சர்வதேச நாணய நிதியத்தின் வரையுக்கமைய பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும்.

நாட்டில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை பாதுகாப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

அது குறித்து வேறு தரப்புகள் எமக்கு விளக்க மளிக்க வேண்டியதில்லை. அவ்வாறு விளக்கமளித்தால் அதனை ஏற்றுக்கொள்கிறோம்.

உறுதியாக பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும். அதேபோன்று ஒன்லைன் பாது காப்புச் சட்டத்திலும் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## 1,408 மருத்துவர்களுக்கு நியமனம் வழங்க முடிவு

(கொழும்பு)

ஆரம்ப தர மருத்துவ அதிகாரிகளாக பயிற்சிகளை நிறைவுசெய்த 1,408 மருத்துவர்களுக்கு நியமனம் வழங்க சுகாதார அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பயிற்சியை முடித்த, உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்த மருத்துவர்கள், அமைச்சின் மனிதவள முகாமைத்துவ மற்றும் தகவல் அமைப்பு ஊடாக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என்று சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் எச்.எம். அர்ஜுன திலகரத்ன அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக தங்கள் விண்ணப்பங்களை இணையத்தளம் வழியாக சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## 'அநுர கோ கம' ஒரு போதும் உருவாகாது அமைச்சர் சுனில்

(கொழும்பு)



கோட்டா கோ கம போன்று, அநுர கோ கம ஒரு போதும் உருவாகாது எனவும் அது உருவாக்கப்பட்டால் அதை அரசியல் வாதிகள் அல்லாது, மக்களே உருவாக்க வேண்டும் எனவும் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை மக்கள் போய் விடுங்கள் என்று சொன்னால், தோழர் அநுர ஒரு கணம் கூடத் தங்க மாட்டார் எனவும், நம்மில் யாரும் ஒரு கணம் கூட தங்க மாட்டோம். நாம் இங்கு மகிழ்ச்சிக்காக இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பெல்வத்தையில் உள்ள செவனகல கரும்பு விவசாயிகளுக்கு இரண்டு மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை என்று கூறி, அங்கும் ஒரு கிராமத்தை உருவாக்க முயன்றனர் எனவும் தெரிவித்துள்ளார். (நி)

## ஆபத்தான அழகு சாதனப் பொருட்கள் ஒன்லைனில் விற்பனை தடுக்க நடவடிக்கை

### நுகர்வோர் அதிகார சபை

(கொழும்பு)

இலங்கை சந்தையில் விற்பனை செய்யப்படும் அழகு சாதனப் பொருட்கள் தொடர்பில் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

49 வகையான அழகு சாதன பொருட்கள் பயன்படுத்த பொருத்தமற்ற அளவில் கன உலோகங்கள் இருப்பதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

சருமத்தை வெண்மையாக்க பயன்படுத்தப்படும் அழகு சாத னப் பொருட்கள் அவற்றில் முக்கியமானவை என அதிகாரசபையின் போட்டித்திறன் மேம்பாட்டு பணிப்பாளர் சமந்த கருணாரத்ன தெரிவித்தார்.

பொருத்தமற்ற அழகு சாதனப் பொருட்கள் ஒன்லைனில் விற்பனை செய்யப்படுவதை தடுக்க நட வடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## மன அழுத்தங்களுக்கு உள்ளாகும் பாடசாலை மாணவர்கள்!

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட பாடசாலை சுகாதார கணக்கெடுப்பின் படி, 22.4 வீதமான மாணவர்கள் தனிமையால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்ததாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சமூகத்தில் பல்வேறு காரணங்களால் பாடசாலை மாணவர்கள் தற்போது மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சின் உளநல இயக்குநரக குழா மின் பதில் பணிப்பாளர், விசேட மருத்துவர் லக்மினி மகோதரத்ன தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்ற விசேட மருத்துவர் லக்மினி மகோதரத்ன இதனைத் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில், இலங்கையில் ஒரு பாடசாலை சுகாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. மேலும் உங்கள் பிள்ளைகளின் தரவுகளைப் பார்க்கும் போது, 22.4 வீதமான பிள்ளைகள் தனிமையால் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.

13-17 வயதுடைய இந்த பாடசாலை செல்லும் பிள்ளைகளில் 11.9 வீதமானோர் ஏதோ ஒன்றைப் பற்றிக் கவலைப் படுவதால் இரவில் தூங்குவதில் சிரமப்படுவதாகத் தெரிவித்தார்.

சுமார் 18 வீதமானோர் மனச்சோர்வின் அறிகுறிகளைக் காட்டினர். 7.5 வீதமானோருக்கு நெருங்கிய நண்பர்கள் இல்லை யெனவும் குறிப்பிட்டார்.

25 வீத பிள்ளைகள் தங்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேச யாராவது இருப்பதாகத் தெரிவித்தார். அதாவது 75 வீதமான பிள்ளைகளுக்கு அவர்களுக்கு நெருக்கமான ஒருவர் கூட இல்லை எனவும் தெரிவித்தார். (நி)

## இரண்டாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவு

(கொழும்பு)

இந்த வருடத்திற்கான பாடசாலை இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவடைந்ததாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகளின் முதல் கட்டம் இம் மாதம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக வுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகளின் இரண்டாம் கட்டம் நவம்பர் 17 ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் 19 ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## விராட் கோலி சிறந்த "என்டெர்டெய்னர்" நேர்காணலில் டோனி



சமீபத்திய நேர்காணல் ஒன்றில் விராட்கோலி குறித்து டோனி பேசி இருக்கும் வீடியோ தற்போது, கிரிக்கெட் ரசிகர்களால் சமூக வலைதளங்களில் அதிகமாக பகிரப்பட்டு வைரலாகி வருகிறது.

இந்தியாவில் இந்த தலைமுறை கிரிக்கெட் ரசிகர்களால் பெரிதும் கொண்டாடப்படும் கிரிக்கெட் வீரர்களாக மகேந்திர சிங் டோனியும், விராட் கோலியும் உள்ளனர்.

ஆனாலும் கிரிக்கெட் டில் இருவரும் மாறுபட்ட தன்மையுடனேயே இருந்துள்ளனர். டோனி அமைதியான வீரராக இருந்த தால் 'கப்டன் கூல்' என அழைக்கப்பட்டார். விராட் கோலி அப்படியே முழு மாற்றாக ஆக்ரோஷமான வீரராகவே அதாவது ஆங்கிரி பேர்டாகவே இருந்துள் ளார்.

மகேந்திர சிங் டோனி சர்வதேச கிரிக்கெட்டை விட்டு 15 ஓகஸ்ட், 2020 ஆம் ஆண்டே ஓய்வு பெற்றிருந்தாலும் ஐ.பி.எல் தொடரில் சென்னை அணிக்காக விளையாடி வருகிறார்.

விராட் கோலியும் சர்வதேச ரி-20 போட்டி களில் இருந்தும், டெஸ்ட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெற்று விட்டார். ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் மட்டுமே தொடர்ந்து விளையாடிவருகிறார்.

ஆனாலும் இன்றளவும் சமூக வலைதளங்களிலும் ரசிகர்கள் மத்தியிலும் அதிகம் பேசப்பட்டு வரும் வீரர்களாக டோனியும் கோலியும் இருக்கின்றனர்.

இந்நிலையில் சமீபத்தில் நடந்த நேர்காணல் ஒன் றில் டோனி கலந்து கொண்டார். அதில் விராட் கோலி குறித்து கேட்ட கேள்விக்கு டோனி கூறிய பதில் இணையத்தில் வைரலாகி விராட் கோலி ரசிகர்களையும், கிரிக்கெட் ரசிகர்களையும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

அந்த நேர்காணலில் விராட்கோலி பற்றி டோனி கூறியதாவது, "என்டர்டெயினர் விராட்கோலி சிறப்பாக பாடுவார், நன்றாக மிமிக்ரி செய்வார். விராட் கோலி சிறந்த என்டெர்டெய்னர்" என்று கூறியுள்ளார்.

இந்த வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் அதிகமாக பகிரப்பட்டு வருகிறது. (நி)

## இது புதுசா இருக்கே...

## சர்வதேச ரோபோ விளையாட்டுப் போட்டிகள்



சீனாவில் வரும் 15ஆம் திகதி தொடங்க உள்ள சர்வதேச ரோபோ விளையாட்டு போட்டிகள் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன. உலகில் மனிதர்கள் எண்ணிக்கை குறையத் தொடங்கியுள்ள நிலையில் அடுத்து இயந்திர மனிதர்கள் எண்ணிக்கை பெருகத் தொடங்கியுள்ளது. வீடுகள், உணவகங்களில் இருந்து தொழிற்சாலைகள் வரை இயந்திர மனிதர்கள் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. சீனா போன்ற பெருந்தொழில் நாடுகளில் முழுக்க முழுக்க இயந்திர மனிதர்களே பணிபுரியும் ஆலைகள் பெருகி வருகின்றன. இந்நிலையில் இயந்திர மனிதர்களுக்காக என்றே உலகளாவிய விளையாட்டு போட்டியை சீனா நடத்த உள்ளது. 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற அதே இரு மைதானங்களில் இப்போட்டிகள் 3 நாட்களுக்கு நடைபெற உள்ளன.

இயந்திர மனிதர்களுக்கென்றே உலகளவில் நடைபெறும் முதல் விளையாட்டு போட்டி இதுவாகும், இதற்கு முன் கடந்த ஏப்ரல் மாதம் ரோபோக்களுக்கான ஓட்டப் பந்தயத்தை சீனா நடத்தியிருந்தது. தடகளம், கால்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ் என 11 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற உள்ளன. இதில் மனித அசைவை அப்படியே வெளிப்படுத்துவது, வேகம், ஒருங்கிணைப்பு, குழுவாக செயல்படுவது போன்ற விடயங்களும் சோதிக்கப்படும். ரோபோக்கள் இனியும் விளையாட்டான பொருட்களல்ல என்பதை இந்த போட்டிகள் உலகிற்கு உணர்த்தும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. (நி)


# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் இராச பாதை வீதியில் 22 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- பிரதான இராச பாதை வீதியில் இருந்து 2ஆவது காணி 50 M தூரத்தில் உள்ளது.
- 20 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்டநிலையில் உள்ளது.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்றுச் சூழல்.
- இக்காணியில் இருந்து திருநெல்வேலி பிரதான சந்தை கல்வியங்காடு பிரதான சந்தை 1½ km தூரம்.
- நல்லூர் ஆலயம் 2 km தூரம்.
- ஒரு பரப்பின் விலை 69 லட்சம்






பார்வையிடும் நேரம் - காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு: ஜெயம்

(4994)

077 814 7389, 077 986 5457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(4963)

UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

தொடர்புகளுக்கு

077 839 3974, 076 889 1308


# கோபா குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு

(கொழும்பு)

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பதவிக்கு கபீர் ஹாஷிமின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கோபா குழுவின் தலைவர் பதவியில் இருந்து நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் பதவி விலகல் செய்துள்ளார்.பாராளுமன்றத்தில் விசேட உரை ஒன்றை ஆற்றிய போது அவர் தனது பதவி விலகல் முடிவை அறிவித்தார்.அரசாங்கக் கணக்குகள் குழுவின் தலைவர் பதவியை எதிர்க் கட்சிக்கு வழங்க இணக்கம் ஏற்பட்டுள்ளதால் அதற்கு வழி வகுக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் குறிப்பிட்டார்.இந்நிலையில் எதிர்க்கட்சியால் முன்மொழியப்பட்டுள்ள கபீர் ஹாசிமின் நியமனம் விரைவில் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# வாகன இறக்குமதி
## ஒருபோதும் நிறுத்தப்படமாட்டாது
### உறுதியளித்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

வாகன இறக்குமதி நிறுத்தப்படும் எனக் கூறும் செய்தி முற்றிலும் பிழையானது என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது பாராளுமன்றில் உரையாற்றி வரும் அவர், வாகன இறக்குமதி ஒரு போதும் நிறுத்தப்படாது என உறுதியளித்துள்ளார்.பாராளுமன்றில் வாகன இறக்குமதிக்கு எதிராக தெரிவிக்கப்படும் கருத்துக் கள் முற்றிலும் தவறானவை.

மக்களை குழப்பும் கருத்துக்களே அவை. இவற்றை கண்டு மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இன்றே சென்று வாகனங்களை மக்கள் கொள்வனவு செய்யுங்கள் என குறிப் பிட்டுள்ளார். (நி)


**இந்திய சாஸ்திரியார் வருகை**

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை,வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368

No.139, Main Street Jaffna.
யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்
(முன்பதிவு செய்து வரவும்) (4984)





## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24.05.1955 மறைவு 08.08.2015


அமரர்.திரு **மாணிக்கம் சண்முகராஜா**

( வில்லுத்தகடு இராஜன், இராஜன் மினிபஸ் உரிமையாளர் )

திதி:- 08.08.2025

அன்பின் திருவுருவே!
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டு பத்தல்ல பத்தாயிரம் ஆகலாம்
காலங்கள் விடை பெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள்
என்றென்றும் நம்மை விட்டு நீங்காது

(4877)



82/17,3 ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# இராசிபலன்

08.08.2025
ஆடி 23, வெள்ளிக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல்-2.44 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 3.42 மணிவரை

சுப நேரம் 6.04-7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
வரலட்சுமி விரதம்
பட்டினத்தடிகள் குருபூசை

சந்திராஷ்டமம்
திருவாதிரை, புனர்பூசம்

**வளவன்**

**மேஷம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கனவுப் பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கடகம்** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள்.

**மகரம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பெரியோர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மனக் குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம்.

**மிதுனம்** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, திடீர் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு.

**கன்னி** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மீனம்** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.

திருப்பிக் கொடுக்கப்படாத கடன்கள் மன்னிக்கப்படாத பாவங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணி தொடக்கம் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் இசையரங்கில் பாட்டு- ஜெகதீஸ்வரன் மதுசிகன், வயலின்- இராசரத்தினம் நிறோசன், மிருதங்கம்- ஞானவேல் வசந், கெஞ்சிரா- விமலசிங்கம் இராகவன், மோசிங் -நித்தியானந்தம் மோகனதர்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள நாட்டிய அரங்கில் நடனம் லஜ நாட்டியா நடனப் பள்ளி மாணவர்கள், நட்டுவாங்கம்-திருமதி. லஜந்தா குணா, பாட்டு- கந்தசாமி கஜீபன், மிருதங்கம்- கனகசபை சிவகுமார், வயலின் குமரேசன் சயந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (8)




# பொதுப் போக்குவரத்து தொடர்பில் முறைப்பாட்டு இலக்கம் அறிமுகம்




(அராலி)

ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைய, பொதுப் போக்குவரத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் மற்றும் இடர்பாடுகளை முறையிடுவதற்கான தொலைபேசி இலக்கம் வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் அறிமுகம் செய்யப்பட்டது.

குறித்த 071 909 0900 இலக்கத்திற்கு குறுந்தகவல் (SMS - மற்றும் Whatsapp) மற்றும் 021 228 5120 நிலையான தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கிய விழிப்புணர்வு ஸ்டிக்கரினை பேருந்துக்களில் ஒட்டும் நிகழ்வு மாவட்டச் செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் கே.சிவகரனால் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி, ஆகியோரும் கலந்து கொண்டார்கள். (8-104)

## கா! நல்லைக் குமரேசனே!

கட்டுக் கடங்காமற் சுட்டிடுங் கொடுமைகள்
கண்முன்னே வந்தபோதும்
வெட்டியே வீழ்த்திடக் கட்டிலாக் கந்தனின்
வேலங்கு வந்துமோதும்
தட்டியே கேட்டிடத் தங்கவடி வேலவன்
தருவாக நிற்கும்போது
கட்டியே யவன்பாதம் கெட்டியே பற்றினோம்
கதிநல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 140 | 200 | 230 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 160 | 200 |
| தக்காளி | 120 | 200 | 250 | 130 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 350 | 280 | 200 | 350 |
| கரட் | 400 | 500 | 600 | 380 | 500 |
| பூசணி | 100 | 140 | 70 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 200 | 120 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-250 | 350 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 150 | 110 | 150 |
| பாகற்காய் | 300 | 400 | 300 | 350 | 400 |
| வெண்டக்காய் | 100 | 100 | 150 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 250 | 130 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 150 | 160 | 200 | 180 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 200 | 200 | 300 |
| பீற்றூட் | 150 | 100 | 150 | 130 | 160 |
| கறிமிளகாய் | 400 | 600 | 500 | 480 | 600 |
| முருங்கைக்காய் | 300 | 500 | 500 | 230 | 400 |
| போஞ்சி | 400 | 700 | 800 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 300 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 40-120 | 150 | 80 | 120 |
| தேசிக்காய் | 150 | 60-100 | 150 | 100-250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-220 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 650 | 700 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 300 | 250 | 450 |
| முள்ளங்கி | 150 | 160 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 100 | 200 |

# பறவைகள் சார் விழிப்புணர்வு பலகை நாட்டல்

(யாழ்ப்பாணம்)

இயற்கை ஊக்குவிப்பு கழகம் மற்றும் Dialog நிறுவனம் இணைந்து எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பறவைகள் தொடர்பான விழிப்புணர்வு பலகை பண்ணை வீதி மண்கும்பான் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நாட்டப்படவுள்ளது.

இந் நிகழ்வில் கலந்து இயற்கைசார் பாதுகாப்பில் உங்களது பங்களிப்பை ஏற்படுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# நாவாந்துறை பரலோக அன்னை ஆலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலய வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த நாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருச்செப மாலையும் நற்கருணை பெருவிழா திருப்பலியும் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து 15 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் மாலை 6 மணிக்கு திருச்சொரூப பவனியும் இடம்பெறும் என ஆலய பங்குத்தந்தை அறிவித்துள்ளனர். (ஞ)

## சிவந்த மேனியன் செந்தமிழ் முருகன்

சிவந்த மேனியன் செந்தமிழ் முருகன்
செவ்வேள் முருகவேள் என்று அழைப்பர்
தவமாய் வந்து அருளும் வேலவன்
சாலவும் பலர் விரும்பித் துதிப்பர்
உவந்து ஏற்பது மயில் வாகனம்
உற்ற மகா மந்திரம் சரவணபவ
இவன் வீற்றிருக்கும் எடுப்பான தோற்றம்
இலங்கும் நல்லூர் கோவிலில் காண்பாய்.

கலாபூசணம் செ.பரமநாதன்,
மண்டைதீவு- 02.

## துன்பங்கள் துடைத்திடுவாய்

கலியுக வரதமே எம் கற்பகமே எங்கள்
கண் கண்ட தெய்வமே நல்லூரின் காவியமே
வையகம் போற்றிடும் சிவசக்தி பாலகனே
துயரங்கள் போக்கி எம்மை நிம்மதியாய் வாழ வைப்பாய்
போற்றி உன்னை வாழ்த்துகிறோம் போக்கிடுவாய்
எம் துயரை
நல்லாட்சி மலர்ந்திங்கே நாம் மாண்புடனே வாழ்ந்திடவே
மால் மருகன் மருகனே வள்ளி தெய்வானை மணவாளா
நம் வாழ்வில் இன்பம் மலர்ந்திட வரமருள்வாய்
வேலவனே

மு.விக்னேஸ்வரன்
ஓய்வு நிலை அதிபர்,கோப்பாய்.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

கல்யாண புடவை வகைகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இல.41, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
021 222 2063

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில் கடும் வெப்பம்

# எச்சரிக்கை மட்டத்திற்கு அதிகரிக்க வாய்ப்பு!

## வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கு வானிலை ஆய்வு மையம், வெப்பம் மிக்க வானிலை எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.**




வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களிலும், வெப்பக் குறியீடு - மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை - "எச்சரிக்கை நிலைக்கு" அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

அதிக வெப்பநிலையின் கீழ், நீண்ட நேரம் வெளிப்புறங்களில் வேளைகளில் ஈடுபட்டால் சோர்வு ஏற்பட வாய்ப்புள் ளது. அதேநேரத்தில் வெப்பப் பிடிப்புகளுக்கு வழிவகுக்கும்.

எனவே, முடிந்தவரை அடிக்கடி நிழலை நாடுமாறும், கடுமையான வெளிபுற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். (நி)

# அடுத்த இலக்கு ரணிலா?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படுவது தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மறைமுகமாக கருத்து தெரிவித்துள்ளார்.

விரைவில் கைதுசெய்யப் படபோகும் ஒரு அரசியல் வாதியின் பிரத்தியேக செயலாளரை விசாரணை செய்துள்ளோம் என்றும், அவரின் ஆலோசகரை நிதி மோசடி பிரிவுக்கு அழைத்து வாக்கு மூலம் பெற்றுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

அடுத்து யாரை விசாரணை செய்யவுள்ளோம் என்பது தொடர்பில் அவர் மறைமுகமாக இந்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக செயலாளரான சாண்ட்ரா பெரேரா குற்றப் புலனாய்வு பிரிவிற்கு அழைக்கப் பட்டிருந்தார்.

ஜனாதிபதி செயலகத்தின் நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு பயணம் ஒன்று தொடர்பான விசாரணைக்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

மேலும் ரணில் விக்கிரமசிங்கவின் முன்னாள் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் முன்னிலையாகியிருந்தார். (நி)

### வர்த்தகர்களின் எதிர்ப்பை அடுத்து

# வியாபார நிலையங்களை அகற்றும் பணி இடைநிறுத்தம்

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கிளிநொச்சி பகுதி வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வீதியோரங்களில் அமைந்துள்ள வியாபார நிலையங்களை அகற்றும் நடவடிக்கையினை கரைச்சி பிரதேச சபையினர் நேற்றைய தினம் மேற்கொண்ட போது வர்த்தகர்கள் எதிர்ப்பு தெரிவித்தமையால் இடைநிறுத்தப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில், கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட கிளிநகர் பகுதி வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக உள்ள பயணிகள் நடைபாதையில் அமைந்துள்ள கொட்டகைகளை அகற்றுமாறு ஒலிபெருக்கி மூலம் சில நாட்களுக்கு முன்பு பிரதேச சபையினர் அறிவித்து இருந்தனர்.

ஆனால் குறித்த கொட்டகைகள் அகற்றப்படாதவிடத்து நேற்றைய தினம் பிரதேச சபையினர் கனகபுரம் வீதியில் உள்ள கடை ஒன்றினை யேசிபி இயந்திரம் மூலம் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது வியாபாரிகள் எதிர்ப்பு தெரிவித்தமையினால் குறித்த பணி இடைநிறுத்தப்பட்டது.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச சபை தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது இந் நடவடிக்கையானது 3 தடவைகள் ஒலி பெருக்கி மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

அத்துடன் இவ்வீதி இரு வழி பாதையாக மாற்றியமைக்கவுள்ளதாகவும் ஏற்கனவே வீதியில் இருந்து 50 அடிக்கு இரு புறமும் தள்ளியே வர்த்தக நிலையங்கள் அமையப்பெற வேண்டும் என நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தீர்ப்பு வழங்கியமைக்கு அமைவாகவும் வர்த்தக சங்கத்தினர் நடைபாதை வியாபாரிகளை அகற்றித் தருமாறு எழுத்து மூலமம் கேட்டு கொண்டதற்கு அமைவாகவும் இந் நடவடிக்கையில் ஈடுபட்டதாக தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது. (8-271)

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

## பெறுகை அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கான தேசிய பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | ஒப்பந்த காலம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | கேள்வி வங்கி பிணைப் பணம் / காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/13/IMP/25/11 11-17 | Repair & Improvement Works of Gents Staff Quarters at District Secretariat, Kilinochchi, | 90 நாட்கள் | 14.3 மில்லியன் | C7 or above, Building | ரூபா. 214,500/- 07.12.2025 வரை | 3500.00 |
| 2 | KN/EB/13/IMP/25/11 11-18 | Painting & Repairing Works in Staff Officer's Family Quarters (No: A-02) at District Secretariat, Kilinochchi | 60 நாட்கள் | 5.6 மில்லியன் | C8 or above, Building | ரூபா. 84,000/- 07.12.2025 வரை | 2000.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.

I. நிர்மாணப் பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச்செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப் படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்.

2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:- 0212285663, பக்ஸ் இல:-0212283966).

3. கேள்வி ஆவணங்களை **11.08.2025** ஆம் திகதியிலிருந்து **22.08.2025** ஆம் திகதி வரை முற்பகல் **9.00 மணி** முதல் பிற்பகல் **3.00 மணி** வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

4. இப் பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) **20.08.2025** ஆம் திகதி முற்பகல் **10.30** மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.

6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "KN/........................." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு **25.08.2025** ஆம் திகதி முற்பகல் **10.30** மணிக்கு முன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.


**சு.முரளிதரன்,**
**திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர்/ மாவட்டச் செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-3597)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## சந்திரனில் அணு உலை அமைக்க நாசா திட்டம்



(வோஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா, 2030 ஆம் ஆண்டுக்குள் சந்திரனில் அணு உலை அமைக்கும் திட்டங்களைத் துரிதப்படுத்தி வருவதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மனிதர்கள் சந்திரனின் மேற்பரப்பில் வாழ நிரந்தர தளத்தை உருவாக்குவது அமெரிக்காவின் இலட்சியங்களின் ஒரு பகுதியாகும்.

நாசாவின் செயல் தலைவர், சீனா மற்றும் ரஷ்யாவின் இதே போன்ற திட்டங்களைக் குறிப்பிட்டு, இரு நாடுகளும் சந்திரனில் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட மண்டலத்தை அறிவிக்கலாம் எனத் தெரிவித்தார்.

ஆனால் நாசாவின் சமீபத்திய மற்றும் கடுமையான பாதீட்டு வெட்டுக்களைக் கருத்தில் கொண்டு, இலக்கு மற்றும் காலக்கெடு எவ்வளவு யதார்த்தமானது என்பது குறித்த கேள்விகள் உள்ளன.

அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் சந்திர மேற்பரப்பை ஆராய விரைந்து வருகின்றன.

மேலும் சில நிரந்தர மனித குடியேற்றங்களையும் திட்டமிடுகின்றன.

2022ஆம் ஆண்டில், நாசா ஒரு உலை வடிவமைக்க நிறுவனங்களுக்கு 5 மில்லியன் டொலர் மதிப்புள்ள மூன்று ஒப்பந்தங்களை வழங்கியது.

இந்த ஆண்டு மே மாதம், சீனாவும், ரஷ்யாவும் 2035ஆம் ஆண்டுக்குள் சந்திரனில் ஒரு தன்னாட்சி அணு மின் நிலையத்தைக் கட்டும் திட்டங்களை அறிவித்தன.

பெரும்பாலான விஞ்ஞானிகள் சந்திரனின் மேற்பரப்பில் தொடர்ச்சியான மின்சாரத்தை வழங்க இதுவே சிறந்த ஒரே வழி என்று ஒப்புக்கொள்கிறார்கள்.

ஒரு சந்திர நாள் என்பது பூமியில் நான்கு வாரங்களுக்குச் சமம், இதில் இரண்டு வாரங்கள் தொடர்ச்சியான சூரிய ஒளியும் இரண்டு வாரங்கள் இருளும் இருக்கும். எனவே, சூரிய சக்தியை நம்பியிருப்பது மிகவும் சவாலானது. (நி)

# காசாவை முழுமை...

# நெதன்யா...

## * ஒருநாளில் 135 பேர் உ...

## * 771 பேர் காயம்

## * 5 பேர் பட்டினியால் பலி...

(ஜெருசலேம்)

**காசா முழுவதும் நேற்று முன்தின... இஸ்ரேலியத் தாக்குதல்களில் 13... பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்ட... மற்றும் 771 பேர் காயமடைந்தனர் என... சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது...**

பட்டினியால் இறந்தவர்களின் எண்ணிக்கை 193 ஐ எட்டியுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 5 பட்டினி மரணங்களை சுகாதார அமைச்சகம் உறுதிப்படுத்... ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்ச...

## இந்தியாவுக்கு மேலும் 25 சதவீத வரி விதித்த அமெரிக்க ஜனாதிபதி

(வோஷிங்டன்)

இந்தியாவுக்கு மேலும் 25 சதவீதம் வரி விதிக்கப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள நிலையில், இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதியாகும் பொருட்களுக்காக வரி 50 சதவீதமாக அதிகரித்துள்ளது.


உக்ரைன் மீது தாக்குதல் நடத்தும் ரஷ்யாவிடம் இந்தியா தொடர்ந்து மசகு எண்ணெய் வாங்கிவந்தது.

இதனால், இந்திய பொருட்களுக்கு 25 சதவீத வரியும், ரஷ்யாவுடன் கூடுதலாக வர்த்தகம் மேற்கொள்வதால் கூடுதலாக அபராதம் விதிப்பதாகவும் அண்மையில் அறிவித்தார். முதலில் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் என அறிவிக்கப்பட்ட இந்த அறிவிப்பு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் ரஷ்யாவிடம், மசகு எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்தாததால், அடுத்த 24 மணி நேரத்தில் இந்த வரியை மேலும் கடுமையாக்கபோவதாகவும் ட்ரம்ப் கூறியிருந்தார்.

இதன் மூலம் அடுத்த 24 மணி நேரத்தில் முடிவை மாற்றிக் கொள்ளும்படி நெருக்கடி கொடுத்து இருந்தார்.

இந்நிலையில், இந்தியாவுக்கு கூடுதலாக 25 சதவீத வரி விதிப்பதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார். ஏற்கனவே 25 சதவீத வரி விதிக்கப்பட்ட நிலையில், தற்போது... விதிக்கப்பட்ட வரி மூலம் இந்திய... பொருட்களுக்கான வரி 50 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள... ளது. (நி...



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ...மையாக ஆக்கிரமிக்க ...ாகு முடிவு!

## ...யிரிழப்பு



...
...ம்
...35
...ர்
...று
...து.

...யுள்

...மின்

நெதன்யாகு காசாவை முழுமையாக ஆக்கிரமிக்க முடிவு செய்துள்ளார்.


ஐ.நா உதவி பொதுச் செயலாளர் மிரோஸ்லாவ் ஜென்கா, நெதன்யாகுவின் நடவடிக்கை கவலையளிக்கிறது என்று ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலிடம் தெரிவித்தார்.

தாக்குதலைத் தொடரலாமா வேண்டாமா என்பதை இஸ்ரேல் தான் முடிவு செய்ய வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

காசா மீதான இஸ்ரேலின் போரில் இதுவரை குறைந்தது 61,158 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 151,442 பேர் காயமடைந்துள்ளனர். (நி)

## AI பயனாளர்களின் நினைவுத்திறன் பாதிப்பு

### ஆய்வில் வெளியான அதிர்ச்சித் தகவல்



(வோஷிங்டன்)


செயற்கை நுண்ணறிவுத் தளங்களைப் பயன்படுத்துபவர்களது மூளையின் சிந்திக்கும் ஆற்றல் 47% குறைவடைந்துவிட்டதாக அதிர்ச்சித் தகவலொன்று வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் கேம்பிரிட்ஜ் நகரில் உள்ள தனியார் பல்கலைக்கழகமான மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் செயற்கை நுண்ணறிவு தளமான chatgpt பயனாளர்களின் மூளையின் செயற்பாட்டை ஆராய்ந்து அதன் முடிவுகளை வெளியிட்டுள்ளது.

கடந்த 4 மாதங்களாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் chatgpt பயன்படுத்துபவர்களின் மூளையின் சிந்திக்கும் ஆற்றல் 47% குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக chatgpt பயனாளர்கள் பலருக்கு சில நிமிடங்களுக்கு முன்பு எழுதிய ஒரு வாக்கியத்தை நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை என்றும் அதே வேளையில் AI பயன்படுத்தாமல் எழுதியவர்களுக்கு இந்தப் பிரச்சினை ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)




## 7 வருடங்களுக்குப் பின் சீனாவுக்கு மோடி விஜயம்!

(பீஜிங்)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏழு வருடங்களுக்குப் பின்னர் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காகவே மோடி இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் குவாங்செள நகரத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பல்வேறு ஆசிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடியின் விஜயம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான உறவுகளில் புதிய ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக 2020ஆம் ஆண்டு லடாக் எல்லைப் பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையே இடம்பெற்ற கோரத்தனமான இராணுவ மோதல் இருநாட்டு உறவுகளை கடுமையாகப் பாதித்திருந்தது.




இந்நிலையில் பிரதமர் மோடியின் சீன விஜயம் இந்திய - சீன உறவுகளை மீளாய்வு செய்யும் எனவும் எதிர்கால ஒத்துழைப்புகளுக்கு வழிவகுக்கும் எனவும் பாதுகாப்பு, வர்த்தகம், பிராந்திய நிலைமை தொடர்பான விவாதங்களுக்கு ஒரு புதிய திருப்புமுனையாக அமையும் எனவும் அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மோடியின் சீன விஜயம் குறித்து இந்திய அரசு அதிகார பூர்வமாக எவ்வித மான அறிவிப்பும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

சட்டவிரோதமாக சம்பாதித்த 15 மில்லியன் ரூபா பணத்தை என்.ஆர். கன்சல்டன்சி என்ற நிறுவனத்தில் முதலீடு செய்தமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இந்த மனு கொழும்பு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இந்த மனுவுடன் தொடர்புடைய நாமல் ராஜபக்ஷவும் ஏனைய பிரதிவாதிகளும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது நீதிமன்றில் ஆஜரான குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், இந்த மனு மீதான நீதிமன்ற அறிக்கைகள் இதுவரை சமர்ப்பிக்கப் படவில்லை என தெரிவித்திருந்தனர்.

இதனை கருத்தில்கொண்ட நீதவான் இந்த மனு எதிர்வரும் ஜனவரி மாதம் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உத்தரவிட்டுள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1997-இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L.கட்டார்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15891 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>7இல்சூரி செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L,Beautician<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண் (வெளிநாடு)<br>தொ.இ: G/15883 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>1இல்செவ்<br>கி-பா-23 1/2<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-BA,DO<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15892 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்-அத்தம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L,Nurse<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/15887 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி-பா-54<br>உயரம்:5'8"<br>7இல்செவ்<br>தகைமை/தொழில்:BSc, Software Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி.IT, Engineer<br>தொ.இ: B/15893 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்-ஆயிலியம்<br>உயரம்-5'5"<br>தகைமை/தொழில்: Bsc,MSc,Dubai<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/15888 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>உயரம்:6"<br>தகைமை/தொழில்: HND,Assistant Engineer<br>எதிர்பார்ப்பு: படித்த தகுதியான பெண்.<br>தொ.இ: B/15894 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>8இல்செவ்<br>கி.பா -64<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில் - A/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15895 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>2 இல் செவ்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: NVQ 4, படவரைஞர்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண் (வெளிநாடு)<br>தொ.இ: B/15897 | பிறப்பு - 2001 - இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: IT(Student)<br>எதிர்பார்ப்பு - உயர்பதவிகள்<br>தொ.இ: G/15896 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 423



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கண்ணாடி தேவையில்லை!

ஒரு நண்பரைத் தேடிக்கொண்டுப் போனேன். அதிக நாள் ஆகிவிட்டது அவரைப் பார்த்து! அதனாலே பார்த்துப்பேசிவிட்டு வரலாம் என்று நினைத்துக்கொண்டுபோனேன். நான் போகும்போழுது அவர் வீட்டு வாசலிலேதான், நின்றுக்கொண்டிருந்தார். தூரத்திலேயே நான் அவரைப் பார்த்து விட்டேன். இரண்டு கையையும் தூக்கி "வணக்கம்" என்று சொல்லி நெருங்கினேன் அவர் அதைக் கண்டு கொள்ளவே இல்லை அவர் பாட்டுக்கு நின்றுகொண்டு இருந்தார்.

நான் அருகிலே நெருங்கியதும் உற்றுப் பார்த்துவிட்டு அடடே நீங்களா மன்னிக்கணும் தூரத்திலே வரும் போது உங்கள் முகம் எனக்குச் சரியாக தெரியவில்லை!" என்றார்

இந்த அனுபவம் பல பேருக்கு ஏற்பட்டிருக்கலாம். இதற்கு என்ன காரணம்? மையோப்பியா (Myopia) அதாவது கிட்டப் பார்வைக் கோளாறு.

கிட்டப்பார்வைக் கோளாறு அருகிலே உள்ளது நன்றாகத் தெரியும். தூரத்திலே உள்ளது நன்றாகத் தெரியாது. ஒரு பொம்மையைப் பார்க்கிறோம். அதிலே இருந்து வரும் ஒளிக்கதிர்கள் நம் கண் வழியாக உள்ளே போகிறது. கண்ணுக்கு மேலே முன்புறம் உள்ளது விழிவெண்படலம் ! அதன் வழியாக உள்ளே போய் அங்கே உள்ள திரையிலே விழுகிறது. அந்தத் திரைக்குப் பெயர் தான் ரெட்டினா (Retina) விழித்திரை!

பிம்பம் திரையிலே சரியாக விழுந்தால் பார்வை நன்றாக இருக்கு என்று அர்த்தம். நாம் பார்க்கிறதெல்லாம் "பளிச் என்று தெரியும். கிட்டப்பார்வைக் கோளாறு உள்ளவர்களுக்கு இந்த பிம்பம் திரையிலே விழுவதற்குப் பதிலாக அதற்குக் கொஞ்சம் முன்னாலேயே விழுந்துவிடும். அதனாலே பார்க்கின்ற பொருள் தெளிவாக தெரியாது.

இதைச் சரி செய்வதற்கு இதுவரைக்கும் என்ன (Spectacle) செய்துகொண்டிருந்தோம்? கண்ணாடி மாட்டுவோம். இல்லை என்றால் கான்டேக்ட் லென்ஸ் (Contact Lens) பொருத்திக் கொள்வோம்! அதாவது ஒட்டும் கண்ணாடி வில்லை!

இப்ப, கண்ணாடி இல்லாமலேயே பார்வையைச் சரி செய்வதற்கு ஒரு வசதி வந்திருக்கிறது.

ஒளிக்கதிர் சிதறல் அறுவை சிகிச்சை Excimer Laser Photo அதுதான் எக்ஸைமர் லேசர் விழிவெண்படல Refractive Keratectomy-PRK வெண்படலத்திலே நடுப்பகுதியிலே மேலெழுந்த வாரியான 10 முதல் 20 சதவீதம் வரை தடிமனை நீக்கிவிடுகிறது.

இன்னொரு முறை எப்படி என்றால் அது விழிவெண்படல Radial keratectomy! அறுவை சிகிச்சை வெண்படலத்தின் தடிமனான மேற்பகுதியை 95 முதல் 9 சதவீதம் வரை - 4 முதல் 8 ஆரங்களாக வெட்டி செதுக்கி நடுப்பகுதியை சமப்படுத்துகிற அறுவை சிகிச்சை இது.

ஒளிக்கதிர் சிதறல் அறுவை சிகிச்சை இருக்கு பாருங்கள் ஒரு பதினைந்து நிமிடத்திலே அது முடிந்துவிடும். வைத்தியசாலையிலே நாம் தங்கி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அன்றைக்கே வீட்டுக்குப் போய்விடலாம்.

நாம் நமக்கு அறுவை சிகிச்சை நடக்கும் போது விழித்துக்கொண்டே இருக்கலாம். வலி இருக்காது. கண்ணுக்கு மட்டும் தற்காலிகமாக மரத்துப் போவதற்கு மருந்து கொடுத்துவிடுவார்கள்.

லேசர் கருவியை மேல்நோக்கிப் பார்க்கின்ற மாதிரி நாம் படுத்துக்கொள்ள வேண்டும். டாக்டர் என்ன பண்ணுவார் என்றால் நமக்குத் தேவையான ஒளிவிலகல் திருத்தத்தை (Refractive correction) லேசர் கருவியின் கம்ப்யூட்டரிலே பதிவு செய்துவிடுவார். கண் இமைக்காமல் இருப்பதற்கு ஸ்பெகுலம் என்கின்ற கிளிப்பைப் பொருத்தி விடுவார். அதற்குப் பிறகு ரொம்ப லேசாக விழிவெண்படலத்தின் மேல் இழை திசுக்களை (Epithelium) நீக்கிவிடுவார்.

அதற்கு பிறகு கண்ணுக்கு ஒரு கட்டு, அவ்வளவு சிறிய வேலை. பின்பு வீட்டுக்கு வந்துவிடலாம். இதுதான் PRK சிகிச்சை. அதாவது ஒளிக்கதிர் சிதறல் அறுவை சிகிச்சை.

விஞ்ஞானம் வளர்கின்ற வேகத்தைப் பார்த்தீர்களா? இனிமேல் எல்லாம் ஆபரேஷனுக்கும் கத்திக்கும் சம்பந்தமே இல்லை .அதனாலே அறுவை சிகிச்சை என்பதற்கு வேறு வார்த்தையையே கண்டுபிடிக்க வேண்டும் ஏனென்றால் சிகிச்சையிலே அறுவையே இல்லையே! கத்தியின்றி இரத்தமின்றி சுதந்திரம் என்கிறது மாதிரி கத்தியின்றி இரத்தமின்றி ஆபரேஷன்! அதனாலே இனிமேல் ஆபரேஷன் என்றால் யாரும் பயப்பட வேண்டாம். ஒரு நோயாளி அப்படித்தான் வைத்தியசாலையிலே இருந்து தப்பித்து வெளியிலே ஓடி வந்தான்.

வாசலிலே இருந்தவர் "ஏன்ய இப்படி பயந்துகொண்டு ஓடிவருகிறாய்?" என்று கேட்டார். "எனக்கு இன்றைக்கு ஆபரேஷன்! அதுதான் பயந்து கொண்டு ஓடிவருகின்றேன்!" என்றான் அந்த ஆள்! "அதிலே என்ன பயம்? இப்ப அதெல்லாம் சுலபம்" என்றார் இவர். "நான் ஆபரேஷனுக்காக பயப்படாமல் துணிச்சலாத் தான் இருந்தேன். நர்ஸ் சொன்னதைக் கேட்டதும்தான் பயம் வந்துவிட்டது!" என்றான் அவன். "என்ன சொன்னாங்க நர்ஸ்?" என்று கேட்டார். "இது ஒரு சின்ன ஆபரேஷன் தான். பயப்படாதீங்கள். தைரியமாக இருங்கள்! என்று சொன்னார்!". "அப்படிச் சொன்னதற்கு அப்புறமும் உனக்கு என்ன பயம்?" என்றார். "ஐயோ.. அந்த நர்ஸ் அப்படி சொன்னது என்னிடம் இல்லைங்க ஆபரேஷன் செய்யும் டாக்டரிடம்" என்றான் அந்த ஆள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எதிர்வரும் 30 ஆம் திகதி

# வடக்கு-கிழக்கில் பாரிய கண்டனப் பேரணி

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

**செம்மணி மனித புதைகுழி அகழ்வில் கண்டெடுக்கப்படும் உடல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் என நாம் கோரும் அதேவேளை, உள்ளக விசாரணையை திணிக்கும் அரச தலைவரைக் கண்டித்தும் பாரிய கண்டன பேரணியினை எதிர்வரும் 30 ஆம் திகதி நடாத்த உள்ளோம் என்று வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் செயலாளர் சிவானந்தன் ஜெனிற்றா தெரிவித்தார்.**

மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 30 ஆம் திகதி சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தினமாகும். இத்தினத்தில் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்திலும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிலும் மாபெரும் கவனயீர்ப்பு பேரணியை நடாத்த உள்ளோம்.

குறித்த பேரணியானது கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இருந்து காந்தி பூங்கா வரையும், வட மாகாணத்தில் சங்கிலியன் நினைவிடத்தில் தொடங்கி செம்மணி வரை பேரணியாக நடைபெறவுள்ளது.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகப்பகுதியில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் சர்வதேச நீதிகோரி தொடர்ச்சியாக போராடி வருகின்றோம், ஆயுத மௌனிப்புடன் 2009 ஆம் ஆண்டு யுத்தமானது மிகப் பெரும் இனவழிப்பின் ஊடாக முடிவுறுத்தப்பட்டது. முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்கு முன்னரும் அதன் பின்னரும் சிறுவர்கள், பெண்கள் உட்பட பலர் வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் இன வழிப்பும், செம்மணி மனித புதைகுழி உட்பட பல மனித புதைகுழிகளும், சித்திரவதை முகாம்கள் ஆகியவை இனப் படுகொலைக்கான முக்கிய ஆதாரங்களாக எம் கண் முன் நிலைத்து நிற்கின்றது இவை அனைத்தும் சர்வதேச விசாரணை ஒன்றின் கீழ் முறையாக விரைந்து விசாரிக்கப்பட வேண்டும். சர்வதேச நீதி விசாரணை காலதாமதமின்றி நடாத்தப்பட வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர் பெற வேண்டிய உண்மையான நீதியும், அவர்களது பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில் சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள் இன்றியமையாதவையாகும்.

அந்த வகையில் எதிர்வரும் புரட்டாசி மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கவும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தவும் அனைத்து நாடுகளும் ஒருமித்து இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறும் மனித உரிமைகளை பேணும் அனைத்து நாடுகளிடமும் கோருகின்றோம்.

எனவே மதத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்தினர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், தன்னார்வலர்கள், தொழிலாளர் சங்கங்கள், கிராமிய அமைப்புகள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் இப்பேரணியில் இணையுமாறு அழைக்கின்றோம் எனத் தெரிவித்தார். (8-33)

## கலாசார சித் ரூ-2025 நிகழ்வில் கிளி.மாவட்டம் சாதனை



(தருமபுரம்)

மாற்றுத்திறனாளிகளின் அழகியல் திறமைகளை தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்வதற்காக சமூக சேவைகள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சித் ரூ-2025' கலை நிகழ்ச்சி கடந்த 5 ஆம் திகதி கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

கலாசார சித் ரூ- 2025 நிகழ்வில் குழு நடனத்தில் கிளிநொச்சி மாவட்டம் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினை பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

மாகாணங்களிலிருந்து வெற்றி பெற்ற கலை நிகழ்வுகள் இங்கு அரங்கேற்றம் செய்யப்பட்டன. வடக்கு மாகாண போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கிளிநொச்சி மாவட்டம் இவ்வாறு பங்கு பற்றி மூன்றாமிடத்தை பெற்று கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளது.

இலங்கை முழுவதும் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் "ஒன்றாக - கைவிடாத" என்ற தேசிய கொள்கைக்கு இணங்க, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து சமூகமயப்படுத்தல், வலுப்படுத்தல், புனர்வாழ்வு மற்றும் நாட்டின் பொருளாதார செயற்பாட்டில் பங்கேற்பவர்களாகவும் பெருமைமிக்க பிரஜைகளாகவும், வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்த சமூக சேவைகள் திணைக்களம் அதன் ஒரு மூலோபாயங்களில் ஒன்றாக 'சித் ரூ' கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறது.

குறித்த நிகழ்வு 6 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-316)

## மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப்பொருட்கள் அழிப்பு!

(நெளுக்குளம்)

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட மாங்குளம் பொது சுகாதார பிரிவில் உள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் வணிகங்கள் மீது பொது சுகாதார பரிசோதகர்களினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

குறித்த சோதனை நடவடிக்கையின் போது மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிப்பு செய்யப்பட்டதுடன் சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (8-299)

## தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு யாழில் விழிப்புணர்வு நடைபவனி!





(யாழ்ப்பாணம்)

தேசிய ரீதியாக இம்மாதம் (ஆகஸ்ட்) 12 ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய இளைஞர் தினம் மற்றும் இலங்கை இளைஞர் சம்மேளனத்தின் பிரதிநிதிகளை நியமிப்பதற்கான தேசிய இளைஞர் மாநாடு ஆகியவற்றை முன்னிட்டும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் தெளிவூட்டும் நடைபவனி விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் பி.ப. 3 மணிக்கு யாழ்ப்பாண பொதுநூலக பகுதியில் இருந்து ஆரம்பித்து யாழ்ப்பாண போதனா வைத்திய வீதியூடாக நகர்ந்து யாழ்.மாவட்ட செயலகம் வரை சென்றடைந்தது.

தேசிய ரீதியாக நடைபெற்ற யாழ்.மாவட்ட நிகழ்வில் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவிப்பணிப்பாளர், மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், மாவட்ட சம்மேளன பிரதிநிதி, பிரதேச சம்மேளன பிரதிநிதிகள், இளைஞர் கழக உறுப்பினர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், மற்றும் மாவட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பெருமளவானோர் பங்கேற்றனர். 0

## பாலத்தில் பயணித்த டிப்பர் விபத்து!



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் முல்லைத்தீவு A35 வீதியின் கண்டாவளை வெளிக்கண்டல் சந்தியில் பாலத்தில் பயணித்த இராணுவ வாகனத்தை முந்தி செல்ல முற்பட்ட டிப்பர் வாகனம் பாலத்தையும் சேதப்படுத்தியதுடன் டிப்பர் வாகனமும் சேதமடைந்துள்ளது. குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 839





இந்த விபரங்களைக் கூறி விட்டு, "பூங்குழலி! இப்போது என்ன சொல்லுகிறாய்? உன் அண்ணியின் பேரில் நீ கோபித்துக் கொண்டது தவறுதான் அல்லவா?" என்று சேந்தன் அமுதன் கேட்டான்.

"நீ சொல்லுவதைக் கேட்டால், அப்படித்தான் தோன்றுகிறது. அவளை எந்த இடத்தில் விட்டுவிட்டு வந்தாய்? அங்கே போய்ப் பார்க்கலாம், வா!" என்றாள் பூங்குழலி.

"அவள் அங்கேயே இருப்பாள் என்பது என்ன நிச்சயம்?"

"அங்கே இல்லாவிட்டால் அக்கம்பக்கத்தில் இருப்பாள். இல்லாவிடில் நம்மை தேடிக் கொண்டு வருவாள். அமுதா! நானும் என் அத்தையும் படகில் ஏறி எங்கே புறப்பட்டோம் என்று அண்ணி கேட்டாள் அல்லவா?"

"ஆம், கேட்டாள்." "நீ அதற்கு மறுமொழி சொல்லவில்லையே? நிச்சயந்தானே?" "நிச்சயந்தான். 'ஊமைப் பிசாசு' என்று அவள் சொன்னதும் எனக்கு உண்டான அருவருப்பினால் மறுமொழி சொல்லாமலே வந்துவிட்டேன்."

"இனிமேல் நல்ல வார்த்தையாக கேட்டாலும் சொல்லாதே! நாங்கள் எங்கே புறப்பட்டோம் என்பதை அவள் ஏன் தெரிந்து கொள்ள விரும்புகிறாள்? அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் அல்லவா? அமுதா! அத்தையைப் பிடித்துக் கொண்டு போனவர்களுக்கும் அண்ணிக்கும் தொடர்பு இல்லை என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அண்ணியின் மூலமாக அவர்கள் உளவறிந்து கொண்டு, தங்கள் காரியம் முடிந்ததும், அவளை அடித்துக் கட்டிப் போட்டு விட்டுப் போயிருக்கலாம். அப்படியில்லா விட்டாலும், அண்ணி வேறு ஏதோ துர்நோக்கத்துடனே தான் எங்களைத் தொடர்ந்து வந்திருக்க வேண்டும். ஆகையால் அவளுடன் ஜாக்கிரதையாகவே நடந்து கொள்! முழுவதும் அவளை நம்பி மோசம் போய் விடாதே!"

"பூங்குழலி! உன் அண்ணியின் சந்நிதானத்தில் உன் அண்ணன் ஊமையாக இருந்து விடுவான் என்று சொல்லியிருக்கிறாய் அல்லவா? அதுபோலவே நானும் இருந்து விடுகிறேன், பேச வேண்டியதையெல்லாம் நீயே பேசிக்கொள்"

இதைக் கேட்ட பூங்குழலி சிரித்தாள். "உன் சிரிப்பு என் செவிகளுக்கு இன்னமுதாயிருக்கிறது. திருநாவுக்கரசரின் தேவாரப் பதிகத்தைப் போல் இனிக்கிறது." என்றான் அமுதன்.

"ஏதோ தவறிச் சிரித்து விட்டேன் அதைக் கேட்டு ஏமாந்து விடாதே! என் உள்ளத்தில் அனல் பொங்குகிறது, நெஞ்சில் நெருப்புப் பற்றி எரிகிறது."

"நெஞ்சின் தாபத்தைத் தணிப்பதற்கு இறைவனுடைய கருணை வெள்ளத்தைக் காட்டிலும் சிறந்த உபாயம் வேறு இல்லை!" என்றான் சேந்தன் அமுதன்.

### 20 அத்தியாயம்
### மீண்டும் வைத்தியர் மகன்

சிறிது நேரம் பூங்குழலியும் அவளுடைய அத்தை மகனும் காட்டு வழியில் மௌனமாக நடந்து சென்றார்கள். பூங்குழலி ஒரு நெடு மூச்சு விட்டு, "அமுதா! உனக்கும் எனக்கும் ஏதோ ஜன்மாந்தரத் தொடர்பு இருக்குமென்று தோன்றுகிறது" என்றாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## புலிக்குப் புலி



(நேற்றைய தொடர்ச்சி)

ஒரு முறை முயலார் சிங்கத்தை ஏமாற்றி குழியில் தள்ளி விட்டதைப் போல, நம்மையும் ஏதாவது சிக்கலில் மாட்டி விடுகிறதோ என்று சிந்தனை செய்தது.

இப்படி யோசித்து யோசித்து அது களைத்துப்போய்விட்டது. அதற்கப்புறம் நரியாரும் கண்களில் தென்படவே இல்லை.

இது காடு முழுவதும் சல்லடை போட்டு தேடி விட்டது, புதிதாக புலி ஒன்று வந்ததற்கான அறிகுறியே காணப்படவில்லை. நரியார் நம்மிடம் பொய் சொல்லி இருக்கிறது.

வரட்டும் பேசிக் கொள்கிறேன், என்று மனதுக்குள் கறுதிக் கொண்டது.

நான்கைந்து நாட்கள் ஓடி விட்டது. வேட்டையாடிச் சாப்பிட்ட களைப்புடன் நடந்து போய்க் கொண்டிருந்த புலியார் திடீரென அங்கு நரியாரை பார்த்தது. அதற்கு கோபம் கரை புரண்டு வந்தது.

"ஓய் நரியாரே" அன்றைக்கு பொய்தானே சொன்னீர், வேறொரு புலி உன்னை வரச் சொன்னது என்று? நரியார் பயத்துடன் இல்லை ஐயா, உண்மையிலேயே புலி தான் வரச்சொல்லியது என்று பக்கத்து குகைக்காரன் சொன்னான்.

அப்படியா அவனும் நரிதானே? ஆமாம் ஐயா. அப்போது புலியை எங்க பாத்தீர்கள்? இந்தக் காட்டைத் தாண்டுகின்ற எல்லையில இருக்குது புலி, அங்க போய் பாரு என்று சொல்லியது.

நானும் கிளம்பிப் போகும்போதுதான், வழியில் உங்களைப் பார்த்தேன். நடுங்கிக் கொண்டே சொன்னது, சரி அந்த நரியை நீ பார்த்தால் உடனே என்னிடம் கூட்டிக் கொண்டு வர வேண்டும் என்ன சரியா? சரி கண்டிப்பா கூட்டிக் கொண்டு வருகின்றேன் என்று சொல்லி விட்டு விட்டென ஓடி மறைந்து விட்டது.

இந்தக் காட்டு எல்லையில இருக்குதாமா! ஒரு கை பார்த்து விடுகிறேன் என்று சொல்லி விட்டு விறுவிறுவென காட்டின் எல்லை நோக்கி நடக்க ஆரம்பித்தது.

காட்டின் எல்லையைப் போய் அடைய சுமார் நூறு மைல் தூரம் நடக்க வேண்டும்.

அதனால் அது போய்ச்சேரும் போது மெல்ல இருள் வர நடந்து வரும் போதே சற்று தொலைவில் அந்தப் புலியை பார்த்து விட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாம் உலகில் பார்க்க விரும்பும் மாற்றம் முதலில் நம்மிடம் நிகழ வேண்டும். – மகாத்மா காந்தி

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## மெய்ப்பொருள் அறிந்து கருத்துரையுங்கள்

***எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு*** என்கிறார் வள்ளுவர்.

ஆக, அறிவு என்பது மெய்ப்பொருளைக் காண்பதாகும்.

இங்குதான் வள்ளுவர் கூறிய கருத்தின் தன்மையை நாம் அறிதல் வேண்டும்.

அதாவது எவரும் எதுவும் பேசலாம். அவர்கள் பேசுவது அனைத்தும் உண்மையானவை என்று கருதிவிடலாகாது.

மாறாக, யார் எதனைக் கூறினாலும் அதில் இருக்கக்கூடிய உண்மைத்தன்மையை ஆய்ந்தறிதல் வேண்டும்.

ஆம், கூறப்பட்ட கருத்தின் மெய்ப்பொருளை அறிவதுதான் அறிவாகக் கொள்ளப்படுகிறது.

வள்ளுவர் கூறிய மேற்படி குறள் கேட்போனுக்கு மட்டும் கூறப்பட்டதாகக் கருதிவிடக் கூடாது.

மாறாக கூறப்படுகின்ற விடயங்கள் மெய்யானவையாக இருக்க வேண்டும்.

அதாவது எழுந்தமானமாக – கேள்விச் செவியன் போல அறிந்ததை அப்படியே ஒப்பித்துவிடலாகாது.

அவ்விதம் ஆய்வின்றி கேள்விச் செவியனாக நாம் இயங்குவோமாயின், அஃது ஊரை – நாட்டை – உலகைக் கெடுப்பதாக ஆகிவிடும்.

எனினும் இன்றைய சமகால நிலைமை என்பது தாம் தாம் அறிந்ததை, அதன் உண்மைத்தன்மை பற்றி எதுவும் அறியாமல் அப்படியே ஒப்புவித்து விடுகின்ற துர்ப்பாக்கிய நிலைமை பரவலாகக் காணப்படுகிறது.

இவ்வாறு பொறுப்பற்றவர்களாக நாம் செயற்படும்போது, அதனை மற்றவர்கள் உண்மையென நம்பி அவர்களும் சேர்ந்து விமர்சிக்கத் தலைப்படுகின்றனர்.

இதன் விளைவாக உண்மைக்கு மாறான விடயங்கள் மக்களைச் சேர்கின்றன.

இஃது ஓர் இனத்தின் – மக்கள் சமூகத்தின் உயர்வுக்கும் எழுச்சிக்கும் பாதகமாகும் என்பதுடன் இத்தகைய எழுந்தமானமான – பொறுப்பற்ற வெளிப்படுத்தல்கள்; தகைசார் பெருமக்களை, மனிதநேயம்மிக்கவர்களை மௌனமாக்கிவிடும்.

ஆம், துரியோதனனின் அதர்மத்தனம் அறம்உணர்ந்த வீஷ்மரை, துரோணரை மௌனமாக்கிவிட, அதுவே பெரும் போராக வெடித்தது.

ஆக, எதையும் எப்படியும் கதைக்கலாம் – விமர்சிக்கலாம் – சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப புரட்டலாம் என்ற மனநிலை நம் மண்ணில் மலிந்தால், அதன் இறுதி முடிவு பசியும் பஞ்சமும் நோயும் இழப்புமாகவே அமையும்.

ஆகையால் எதையும் ஆராய்ந்து அதன் மெய்ப்பொருள் அறிந்து செப்புவதே உயர்ந்த மானிடப் பண்பாகும்.

# புலம்பெயர்ந்த தமிழ் மக்களை திருப்திப்படுத்துவது எமது நோக்கமல்ல

## பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

புலம்பெயர்ந்த தமிழ் மக்களைத் திருப்திப்படுத்துவது எமது நோக்கமல்ல என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழ் புலம்பெயர்ந்தோரை திருப்திப்படுத்தவே அரசாங்கம் முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்னவை கைது செய்துள்ளதாகக் கூறும் கருத்து முற்றிலும் தவறானது.

நீதிமன்றத் தீர்ப்பின் மூலமே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளுக்கு அமைய அவருக்கான தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அவரைக் கைது செய்து தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைத் திருப்திப்படுத்த அரசாங்கம் செயற்படுவதாகக் கூறுகின்றார்கள்.

நாங்கள் திருப்திப்படுத்துவது நமது நாட்டில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களையே. அதுவே எங்களது கடமை.

தற்போது நீதி சரியாக செயற்படுகிறது. நியாயமான தண்டனைகள் வழங்கப்படுகின்றன என்றார். (ம-7)

# தொழிலின்மைப் பிரச்சினை நாட்டில் தீவிரமடைந்துள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

தொழிலின்மைப் பிரச்சினை நாட்டில் தீவிரமடைந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்க பல்வேறு தரப்பினர் முயற்சிப்பதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்க வேண்டிய அவசியம் எதிர்க்கட்சிகளுக்குக் கிடையாது. அரசாங்கத்தின் பலவீனத்தை வெளிப்படுத்தும்போது அதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பாரம்பரியமான எதிர்க்கட்சிகளை போன்று நாங்கள் செயற்படவில்லை. பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்த சிறந்த திட்டங்களுக்கு நாங்கள் நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம். நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் நாங்கள் ஒருபோதும் செயற்படவில்லை.

நாட்டில் பொருளாதார நிலைமை தொடர்பில் ஜனாதிபதி சிறந்த திட்டங்களை முன்வைத்து உரையாற்றுவார் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் அவ்வாறொன்றும் இடம்பெறவில்லை. நாட்டில் தொழிலின்மை பிரச்சினை நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளது. வேலையின்மை பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் 2028 ஆம் ஆண்டு முதல் எவ்வாறு அரசமுறை கடன்களை மீள செலுத்துவது என்றும் கேள்வி எழுப்பினார். (ம-7)

# முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் இரத்து

## சட்டமூலம் சபையில் முன்வைப்பு

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புச் சலுகைகளை இரத்துச் செய்வதற்கான சட்டமூலம் நேற்றுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார இந்தச் சட்டமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனுபவித்து வரும் சிறப்பு சலுகைகளை இரத்துச் செய்வதற்காக 1986 ஆம் ஆண்டின் 4 ஆம் எண் ஜனாதிபதி உரிமைச் சட்டத்தை இரத்து செய்வதற்கான தொடர்புடைய சட்டமூலம் அண்மையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகள் இரத்துச் செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட மூலத்தின்படி முன்னாள் ஜனாதிபதி அல்லது மனைவிக்கு வழங்கப்படும் எந்தவொரு வீடு, மாதாந்திர கொடுப்பனவும், மாதாந்திர செயலக கொடுப்பனவு, போக்குவரத்து, பிற வசதிகள் மற்றும் மாதாந்திர ஓய்வூதியமும் இரத்து செய்யப்படவுள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகளை இரத்து செய்யும் வகையில் ஜனாதிபதியின் உரிமைகள் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான சட்டமூலத்திற்கு அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### இணுவில் அறிவாலயத்தில்

# திரையிடப்படவுள்ள தேசிய விருது பெற்ற நாடகங்கள்

(இணுவில்)

இணுவில் அறிவாலயத்தின் முழு நிலா சிறுவன் அரங்கில் இம்முறை தேசிய நாடக விழாவில் விருது வென்ற இரு சிறுவர் நாடகங்கள் திரையிடப்படவுள்ளன.

இன்று மாலை ஐந்து மணியளவில் இணுவில் அறிவாலய அரங்கில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் செம்முகம் ஆற்றுகைக் குழுவின் "எங்கே போனார் எலியார்", "எங்கே எங்கே குடை எங்கே" ஆகிய சிறுவர் நாடகங்களே மனதைக் கொள்ளை கொள்ளவுள்ளன.

வெல்வி காருண்யா புஷ்கரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உலகக் கிண்ண சதுரங்கப் போட்டியில் பதக்கம் வென்ற செல்வி கஜிஷனா தர்ஷன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7)

# ஜனாதிபதிக்கு களங்கம் விளைவிக்கும் நோக்கில் பதிவு

## குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை ஒரு பெண்ணுடன் இணைத்து சமூக ஊடகங்களில் பகிரப்படும் பதிவுகள் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பிரகாரம் சட்டத்தரணி அகலங்க உக்வத்தே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

குறித்த பதிவுகள் ஜனாதிபதியின் நற்பெயர் மற்றும் குணத்திற்குக் களங்கம் விளைவிக்கும் நோக்கில் தவறான வழியில் அவதூறான உள்ளடக்கத்தைக் கொண்டிருப்பதாக முறைப்பாட்டை அளித்த சட்டத்தரணி கூறியுள்ளார்.

அதற்கமைய குறித்த பதிவுகளுக்குப் பொறுப்பான சமூக ஊடகக் கணக்குகளைச் செயற்படுத்துபவர்கள் மீது விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தப் பதிவுகள் முற்றிலும் ஆதாரமற்றவை என்பதுடன் சமூகத்தைத் தவறாக வழிநடத்தும் எனச் சட்டத்தரணி அகலங்க உக்வத்தே தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 32

சொக்கன்

ஆனால் இஸ்ரேல் இந்தச் சலசலப்புகளையெல்லாம் கண்டுகொள்ளவில்லை. அவர்கள் ஏற்கெனவே மிக் 21 இற்குள் புகுந்து தோண்டித் துருவ ஆரம்பித்திருந்தார்கள். அதன் தொழில்நுட்ப சூட்சுமங்கள் அவர்களுக்கு மெல்லப் புரியத் தொடங்கியிருந்தன.

இதைக் கேள்விப்பட்ட அமெரிக்கா உடனடியாக இஸ்ரேலைத் தொடர்புகொண்டது. எங்களுக்கு அந்த மிக் 21 வேண்டுமே!

தருகின்றோம் ஆனால் பதிலுக்கு நீங்கள் எங்களுக்கு என்ன கொடுப்பீர்கள்?

அமெரிக்கா திகைத்தது. நேற்றுவரை நம்முடைய ஆதரவில் வளர்ந்தவர்கள். இப்போது நம்மிடமே பேரம் பேசுகின்ற அளவுக்கு வளர்ந்துவிட்டார்கள்.

ஆனால் இப்போது இவர்களை முறைத்துக்கொண்டு எந்தப் பிரயோஜனமும் இல்லை. அவர்களிடம் மிக்21 இருக்கிறது. நம்மிடம் இல்லை. ஆகவே கொஞ்சம் பணிந்து போவதுதான் புத்திசாலித்தனம். இஸ்ரேல் கேட்டதைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டது அமெரிக்கா.

அப்போதும் இஸ்ரேல் உடனடியாக மிக்21 ஐ அமெரிக்காவுக்குத் தந்துவிடவில்லை. அதன் நிபுணர்கள் அந்த விமானத்தை நன்கு ஆராய்ச்சி செய்து ஒட்டுமொத்த ஜாதகத்தையும் எழுதிக் கட்டம் போட்டு முடித்தார்கள். அதன்பிறகுதான் அமெரிக்கர்களுக்கு மிக் 21 தரிசனம் கிடைத்தது.

இந்தக் கடத்தல் அத்தியாயத்தால் இஸ்ரேலுக்குஇரட்டை இலாபம். அடுத்து வந்த போர்களில் மிக்21ஐச் சமாளிப்பது எப்படி என்று புரிந்துவிட்டது. மேலதிக வருமானமாக அந்த மிக்21ஐ அமெரிக்காவுக் குத்தள்ளிவிட்டு பதிலுக்கு ஃபான்டம் என்கிற நவீன ரகப் போர் விமானங்களைச் சம்பாதித்து விட்டார்கள். இதன் மூலம் இஸ்ரேலின் விமானப்படை பலம் கணிசமாக அதிகரித்தது.



இத்தனைக்கும் அடிப்படை மொசாட் உளவாளிகளின் கச்சிதமான வேலை. யாராலும் உள்ளே நுழைய முடியாது என்று நினைத்துக் கொண்டிருந்த ஈராக்கிலிருந்து ஒரு பெரிய விமானத்தையே தேட்டை போட்டுக் கொண்டுவருவது என்றால் சாதாரண விடயமா? அதுவரை சி.ஐ.ஏ வின் நிழலில் இயங்குகிற சிறிய கூட்டாளியாக இருந்த மொசாட் அடுத்த சில ஆண்டுகளில் மிகப் பிரம்மாண்டமாக வளர்ந்து விட்டது.

தனக்குப் பால் ஊட்டி வளர்த்த அமெரிக்காவையே திருட்டுத்தனமாக நோட்டம் விட ஆரம்பித்தது!

## முகூர்த்த நேரம்

ஈராக் விமானி முனிர் ரெட்ஃபா இஸ்ரேலுக்காக மிக் 21ஐக் கடத்த திட்டமிட்டிருந்த நேரம் பல மொசாட் உளவாளிகள், இஸ்ரேல் விமானப்படை அதிகாரிகள் அவரைச் சந்தித்துப் பேசினார்கள்.

அவர்கள் பேசப்பேச முனிருக்கு ஆச்சரியம். எங்களோட ஈராக் இராணுவம் எங்க ஊர் விமான நிலையத்தைப்பத்தியெல்லாம் எங்களைவிட உங்களுக்குதான் அதிக விவரம் தெரிஞ்சிருக்கு அது எப்படி? என்று கேட்டார். மொசாட் அவருக்குப் பதில் சொல்லவில்லை தங்களுக்குள் கமுக்கமாகச் சிரித்துக் கொண்டார்கள்.

ஈராக் மட்டுமில்லை. அநேகமாக எல்லா உலக நாடுகளிலும்முக்கியமான இடங்களில் மொசாட் உளவாளிகள் ஊடுருவியிருந்தார்கள். அவர்களுக்குத் தெரியாமல் எங்கேயும் எதுவும் நடந்துவிடமுடியாது.

குறிப்பாக இஸ்ரேலுக்கு எதிராக ஆயுதம் ஏந்தியிருந்த பாலஸ்தீன விடுதலைப் போராளிகள் மத்தியில் பல அரேபியர்களை விலைக்கு வாங்கியிருந்தது மொசாட். இவர்கள் அனுப்பிவைக்கிற தகவல்களை வைத்துக் கொண்டு இஸ்ரேலால் எப்பேர்ப்பட்ட தாக்குதலையும் சுலபமாகச் சமாளித்துவிடமுடிந்தது.

மியர் அமித் காலத்தில் மொசாட்டின் உளவு நெட்வொர்க் மிகப் பிரம்மாண்டமாக வளர் ந்திருந்தது. ஒருபக்கம் திறமைசாலி ஏஜென்ட்கள் இன்னொருபக்கம் அமெரிக்கா சி.ஐ. ஏ புண்ணியத்தில் அதி நவீனசாதனங்கள். மூன்றாவதாக மொசாட் நிபுணர்கள் கஷ்டப்பட்டு உழைத்து உருவாக்கிக் கொண்ட தனித்திறமைகள் தொழில்நுட்ப சாகசங்கள் எல்லாமாகச் சேர்ந்து அவர்களை உலகத் தரத்துக்கு உயர்த்தியிருந்தது.

மிக்21 கடத்தல் சம்பவத்துக்கப்பிறகு இஸ்ரேல் இராணுவத் தலைவர்கள், அமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகள் என எல்லோரும் மொசாட்டைத் தனி மரியாதையுடன் பார்க்க ஆரம்பித்திருந்தார்கள்.

எப்பேற்பட்ட விடயத்தையும் அவர்களிடம் நம்பி ஒப்படைக்கலாம் தலைகிழாக நின்று தண்ணீர் குடித்தாவது வேலையைக் கச்சிதமாகச் செய்து முடித்துவிடுவார்கள் என்று ஒரு நம்பிக்கை பிறந்திருந்தது.

இதனால் இஸ்ரேலைச் சுற்றிலும் எங்கே எந்தப் பிரச்சினை என்றாலும் முதலில் மொசாட்டைக் கூப்பிடுவது வழக்கமாகிவிட்டது. நாங்கள் இப்படி ஒரு விடயம் கேள்விப்பட்டோம் உண்மைதானா? இது பற்றி உங்களிடம் ஏதாவது கூடுதல் தகவல்கள் இருக்கிறதா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நாம் இப்போது என்ன செய்தால் இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க லாம்?

இப்படி அவர்கள் கேட்கிற விபரங்கள் எல்லாமே மொசாட் ஏஜென்ட்களின் விரல் நுனியில் தயாராக இருந்தன. இஸ்ரேலுக்கு எதிராகச் செயற்படக்கூடிய அரசியல் தலைவர்கள், ஆட்சியாளர்கள், தீவிரவாதிகள், தொழில்முறைக் கொலைகாரர்கள் என எல்லோரைப்பற்றியும் கச்சிதமாக ஃபைல் போட்டு கலர் ஃபோட்டோ சகிதம் விவரங்களைத் தொகுத்து வைத்திருந்தார்கள்.

அறுபதுகளின் மத்தியில் இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் நடுவே நிறைய அரசியல் பிரச்சினைகள், எத்தனையோ பேச்சுவார்த்தைகள் நடத்தியும் பிரயோஜனம் இல்லை. அவர்கள் நம்மை அடிப்பதற்கு முன்னால் நாம் முந்திக் கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தது இஸ்ரேல்.

உடனடியாக மொசாட்டுக்கு அழைப்பு வந்தது. நாம எகிப்து நாட்டின் மீது படையெடுக்கணும் அதை எப்போ செய்யலாம் எப்படிச் செய்யலாம் என்று கொஞ்சம் கவனிச்சுச் சொல்லுங்கள்.

மியர் அமித் சுறுசுறுப்பானார். எகிப்தில் இருக்கும் மொசாட் உளவாளிகளைக் கூப்பிட்டுப் பேசினார். அங்கே இன்னும் பல முக்கிய இடங்களில் தன்னுடைய ஆள்களை நுழைப்பதற்குத் திட்டம் தயாரித்தார்.

அப்போது எகிப்து நாட்டின் மிகப் பெரிய பலம் அவர்களுடைய அதிநவீன விமானப்படை அதோடு ஒப்பிடும்போது இஸ்ரேல் ஒரு சின்னக் கரப்பான் பூச்சியைப்போல் போர் தொடங்கி, எகிப்து விமானங்கள் இஸ்ரேல்மீது பறந்தால் அவ்வளவுதான் சில மணி நேரங்களுக்குள் மொத்தத் தேசத்தையும் தரைமட்டமாக்கி விடுவார்கள்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு முழுவதும்...

யப்பட்டனர்.

நேற்று முன்தினம் இக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதில் குற்றங்களில் நேரடியாக ஈடுபட்ட 20 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 675 பேரும் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் மற்றும் குற்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்த 6,129 பாதுகாப்புப் படையினரைப் பயன்படுத்தி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 25,755 நபர்கள், 10,602 வாகனங்கள் மற்றும் 7,998 மோட்டார் சைக்கிள்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த நடவடிக்கைகளின்போது 4 சட்டவிரோத துப்பாக்கிகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர். குடிபோதையில் வாகனம் ஓட்டிய 86 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் கவனயீனமாக வாகனம் செலுத்திய 3,828 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## கிளிநொச்சி புது...

9 மணியளவில் சந்தேகத்திற்கிடமாக தோட்டாக்கள் அதிகளவு சிதறிக் காணப்பட்டது.

அதனை அவதானித்த பாடசாலைச் சமூகம் உடனடியாக கிளிநொச்சி பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு அறிவித்தனர்.

அதனை தொடர்ந்து சம்பந்தப்பட்ட இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சிதறிக் காணப்பட்ட தோட்டாக்களை பாதுகாப்பான முறையில் மீட்டனர்.

150ற்கும் மேற்பட்ட தோட்டாக்கள் மீட்கப்பட்டதுடன் இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104,316)

## ஓடும் ரயிலில்...

குருநாகலைச் சேர்ந்த யுவதி தாமதமாக வந்ததால் இரவு தபால் புகையிரதம் புறப்பட ஆரம்பித்துள்ளது.

இதன்போது ஓடும் ரயிலில் ஏறுவதற்கு முயற்சித்தவேளையே திடீரென கால் தடக்கி விழுந்ததால் ஒரு கால் ரயிலில் சிக்கியதில் முற்றாக சிதைவடைந்துள்ளது.

இவ்வாறு படுகாயமடைந்த யுவதி சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,33,104)

## கிளிநொச்சி...

பழம் ஒன்று ஏலம் போயுள்ளது.

குறித்த ஆலயத்தின் மஹோற்சவம் இடம்பெற்றுவரும் நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாம்பழத் திருவிழாவில் குறித்த தொகைக்கு மாம்பழம் ஏலம் போயுள்ளது.

சுப்பிரமணியம் ஜெயாபரன் என்ற அடியவராலேயே குறித்த மாம்பழம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (ம-7,315)

## தையிட்டி...

யாழ்.தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக தொடர் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த போராட்டமானது நேற்று ஆரம்பமாகியுள்ளதுடன் இன்றுவரை முன்னெடுக்கப்படவுள்ளது.

சட்டவிரோத முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டமானது ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், பொதுமக்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டுள்ளனர். (ம-7,104)

## என்னால்...

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (07) நடைபெற்ற அமர்வின்போது நிலையியல் கட்டளை 27 இன் இரண்டின் கீழ் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடந்த பாராளுமன்ற அமர்வில் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையதான குற்றச்சாட்டின் அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் சந்தேக நபர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேக நபர்கள் 4 பேர், விடுதலை புலிகள் அமைப்பின் 8 உறுப்பினர்கள், ஆயுள் தண்டனை கைதிகள் 3 பேர், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு மேன்முறையீடு செய்துள்ள இருகைதிகள், இரு மரண தண்டனை கைதிகள் 2 பேர் வெலிக்கடை, மகசின், மஹர, தும்பர, பூஸா மற்றும் நீர்கொழும்பு ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகள் தமது தண்டனைக் காலம் நிறைவடைந்த தன் பின்னர் விடுதலையாவார்கள். அல்லது நீதிமன்றத்தின் ஊடாக பிணையளிக்கப்படும் பட்சத்தில் விடுவிக்கப்படுவார்கள் அல்லது மேன் முறையீடு செய்து பிணை பெற்றுக் கொள்ளலாம்.

சிறைக்கைதிகள் விடுவிப்பு தொடர்பில் அரசியலமைப்பின் 34 ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்படும் ஏற்பாடும் காணப்படுகிறது. தமிழ் அரசியல் கைதிகளில் சுமார் 15 பேர் ஜனாதிபதி பொதுமன்னிப்பு தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இவ்விடயம் தொடர்பில் என்னை சிலர் சந்தித்தனர். இவ்விடயத்தில் என்னால் எவ்வித உத்தரவாதமும் வழங்க முடியாது. ஏனெனில் அது நீதியமைச்சின் விடயதானத்துக்குள் உட்படாது. இவ்விடயம் குறித்து ஜனாதிபதி தீர்மானம் எடுக்க வேண்டும். சாதகமான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றேன் என்றார். (ம-7)

## யானை...

குளம், நட்டாங்கண்டலைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சண்முகராசா உதயராசா என்பவரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் வீதியால் பயணித்த நபர் மீதே யானை தாக்கியமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.08.07
சீட்டிழுப்பு இலக்கம் 5914
G 4 8 4 8 4 7
அத சம்பத
G 4 8 4 7
சீட்டிழுப்பு இலக்கம் 0489
National Lotteries Board

சுப தவசக்
சிம்மம் 05 11 19 34

தன நிதானய
திகதி - 2025.08.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1944
W 06 13 41 66 W
Double Chance 25359

மெகா பவர்
திகதி 07/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2262
Q 12 28 29 41 62
Double Chance

ஜய
திகதி 2025.08.07
சீட்டிழுப்பு இலக்கம் 0182
Y 5 4 6 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4156
சீட்டிழுப்பு திகதி 07.08.2025
K 10 36 53 79
K
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.07
சீட்டிழுப்பு இலக்கம் 1223
கன்னி 14 25 56 58 கன்னி
48292

உத்தியோகபூர்வ முடிவுகள்
07.08.2025 வெற்றி வாரம் 0622
சுபிரி வாசனா
C 2 7 1 7 6 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21.502.658.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2888
சீட்டிழுப்பு திகதி 2025.08.07 தினம் வியாழக்கிழமை
30 37 47 58 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,253,294.40

சனிதா
திகதி 07.08.2025 வெற்றி வாரம் 5049
13 22 44 56 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,281,603.20

சசிரி
742
07.08.2025 வியாழக்கிழமை
18 21 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4600
சீட்டிழுப்பு திகதி 07.08.2025 தினம் வியாழக்கிழமை
09 19 20 61 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,304,726.40

லக்பிரக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 30 37 42 53 73
2064
07.08.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.586,603,770.60

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் 2714
சீட்டிழுப்பு திகதி 2025.08.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79.750,883.20
01 11 29 49 N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## AUTO விற்பனைக்கு

புத்தம் புதிய Auto இதுவரை 350 கி.மீ. மட்டுமே ஓடிய வாகனம் உடனடி விற்பனைக்கு உண்டு. பச்சை நிற **Bajaj** நேரடியாக கொம்பனியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

கீழ் கண்ட எண்ணுடன் தொடர்பு கொண்டுபார்வையிடலாம். விலை நேரடியாக பேசித்தீர்த்துக் கொள்ளலாம். (C-3599)

**076 864 6984**



## மாப்பிள்ளை தேவை

1. கைதடி - வண்ணார்பண்ணை, இந்து, 1998, விசாகம், Bachelor of Arts (BA) Majoring in Politics University of otago, Graduate, policy analyst in Newzealand treasury, New zealand citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53788
2. சுன்னாகம், இந்து, 1997, கார்த்திகை, Msc in Bio Medical science, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளைதேவை.53836
3. கந்தர்மடம், நல்லூர், இந்து, 2002, பூரட்டாதி, BSc Software Engnreeing, E.soft பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.53813
4. அளவெட்டி - உரும்பிராய், இந்து, 1999, உத்தரம், Chef School (George Brown College), canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53256
5. சங்கானை- KKS, இந்து, 1999, அத்தம், Bsc, Accounting Economics, uk citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34476
6. சித்தங்கேணி, இந்து, 1999, கேட்டை, Msc, phd University of Queen mary, Uk citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.49678
7. நெடுந்தீவு, இந்து, 1996, அஸ்வினி, MBBS doctor, Uk citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.47836
8. திருநெல்வேலி, இந்து, 1998, உத்தராடம், MBBS, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 36481
9. கரவெட்டி, இந்து, 1995, அவிட்டம், LLB (university of australia), Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.34149
10. அச்சுவேலி, இந்து, 1998, சதயம், Bsc.eng hons in computer science and engineering (university of morotuwa) பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 48542

(4995)

எம்மிடம் எல்லா நாட்டிலும் எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

**S.Sharma J.P**
www.thaalee.com
077 539 3728



## தேவை

நல்லூர் ஆலயச் சூழலிலுள்ள உணவகம் ஒன்றிற்கு சமையலாளர் தேவை.

தொடர்புகளுக்கு

**076 404 0326** (C-3602)



கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3600)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237



## விற்பனைக்கு

01. யாழ்ப்பாணம் சிவன் கோவிலுக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 160 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட 6பரப்புக் காணியும்
02. யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் கே.கே. எஸ் வீதி முகப்புடன் 5பரப்புக் காணியும்
03. யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 10 பரப்பில் அமைந்த அதி நவீன கட்டடத்தொகுதி
04. யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதிக்கு அண்மையில் கீரிப்பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக 2 ½ பரப்பில் அமைந்த வீடும் காணியும்
05. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 32 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட இரு கடைகளும்
06. யாழ். மின்சாரநிலைய வீதியில் C.T.B பஸ்தரிப்பிடத்திற்கு பின்பாக 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட இரண்டு மாடிக் கடைகளும்
07. யாழ்.நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும் யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் குறஸ் வீதியில் 10 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. (C-3596)

**077 723 2535**


# கொழும்பில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு பொரளை, சஹஸ்ரபுரவில் உள்ள சிறிசர உயன அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்திற்கு அருகில் நேற்று (07) இரவு 8.40 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஐந்து பேர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ரி - 56 ரகத் துப்பாக்கியால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
078 097 3127



# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 08.07.2025 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் கனகசபை குணரத்தினம்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 05.08.2025 (செவ்வாய்க் கிழமை) அன்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (08.08.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வம் கனகசபை குணரத்தினம் அவர்களின் மரணச்செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும் தொலைநகலினூடாகவும் முகப்புத்தகத்தினூடாகவும் எம்முடன் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் உரிய நேரத்தில் வேண்டிய உதவிகள் செய்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல் : குடும்பத்தினர்
077 089 0684
07[illegible] 225 7385

(4989)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.